**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**POP. No:64/2019** **நாள்: 25.11.2025**

**எமசா.1, திரு.வீரப்பன்**

**எமசா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

மனுதாரர்கள் என் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் பிச்சைக்கனி என்பவருக்கு நான் அடமானம் எழுதிக்கொடுத்தேன். மனுவில் உள்ள மனுதாரர்கள் 12.07.2016ம் தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய வேண்டியும் 12.07.2016ம் தேதியிட்ட அடமான பத்திரத்தையும் ரத்து செய்ய வேண்டியும் மனுவில் சொல்லியுள்ளார்கள். மனு சொத்தானது என் தகப்பனார் வேலுவுக்கு பாத்தியப்பட்டது தான். என் தகப்பனார் வேலு என்பவர் மனுதாரர்களுக்கும் மற்றொரு சகோதரி சண்முகத்தாய் என்பவருக்கும் சேர்த்து 24.05.2012ம் தேதியில் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இம்மனுவில் உள்ள மனுதாரர்கள் கடந்த 24.02.2016ம் தேதியில் எனக்கு ஒரு பொது அதிகார ஆவணத்தை 3ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் வைத்து பதிந்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் அந்த பொது அதிகார ஆவணத்தை பயன்படுத்திக்கொண்டுமனுதாரர்களுக்கு தெரியாமல் சொத்தை விற்பதற்காக முயற்சி மேற்கொண்டேன் என்றால் அப்படியில்லை. அதனால் தான் பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்யவேண்டும் என்று சொல்லி மனுதாரர்கள் சொன்னார்கள் என்று சொன்னால் அதுதவறு . பொது அதிகார ஆவணத்தை நான் ரத்து செய்வதாக சொல்லி மனுதாரர்களிடம் தெரிவித்து ஆவணம் தயார் செய்திருப்பதாகவும் சொல்லி அவர்களிடமிருந்து கையொப்பம் பெற்றுக்கொண்டு 12.07.2016ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தையும் பவர் ரத்து பத்திரத்தையும் நான் எழுதி வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. இன்று வரையிலும் நான் என் பெயருக்கு மனு சொத்தின் பெயரில் பட்டா பெயர மாற்றம் செய்யவில்லை. மனுதாரர்கள் வருவாய் துறையினருக்கு என் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யக்கூடாதுஎ ன்று சொல்லி ஆட்சேபனை மனுவை கொடுத்த காரணத்தினால் தா்ன என் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் ஏற்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. மனுதாரர்களை ஏமாற்ற வேண்டியும் மனுதாரர்களுக்கு தெரியாமல் நான் 2ம் எதிர்மனுதாரர் பெயருக்கு அடமான பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. மனுதாரர்களுக்கு வேறு சொத்து உள்ளதா என்றுகேட்டால் ஒரு சொத்து இருந்ததை நானும் , மனுதாரர்களும் சேர்ந்து எமசாஆ.1 ஆவணத்தின் மூலமாக கிரையம் செய்து கொடுத்துவிட்டோம். எமசாஆ.1 ஆவணத்தில் நானும் கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி கிரையமானது 13.03.2017ம் ஆண்டு ஆகும். ரூ.1,50,000/–க்கு நாங்கள் கிரையம் செய்தோம் என்றால் சரிதான். மனுதாரர்களுக்கு 4 பவுண் நகையை நாங்கள்போட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் அது சரியல்ல. 4 பவுன் நகை ரூ.2,00,000/–க்கு வாங்கியது என்பதற்கான ரசீதை தாக்கல் செய்யவில்லை.

1ம் மனுதாரர் ஜெயலட்சுமிக்கு விவாகரத்து ஏற்பட்டு விட்டது என்றால் சரிதான். அவர் தனியாக தான் உள்ளார். 2ம் மனுதாரர் மனோரஞ்சிதம் என்பவரின் கணவர் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறார் என்பதற்கான ஆவணத்தை நான் தாக்கல்செய்யவில்லை. 2ம் மனுதாரர் எந்த வேலையும் பார்க்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. என் தாயாருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் சொத்து என்னவென்றுகேட்டால் எமசாஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து தான். இது போக வேறு சொத்து எதுவும் இல்லை. மனுதாரர்கள் லேவாதேவி தொழில் செய்து வருவதாக நான் தவறாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அப்படியில்லை. மனுதாரர்கள் நல்ல வசதியாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர்களுக்குவேறு சொத்து இல்லை என்றும் இந்த மனுவில் கண்ட சொத்தின் பாத்தியமும் கிடைத்தால் தான் மனுதாரர்களுக்கு சொத்துரிமை கிடைக்கப்பெறும் என்று சொன்னால் அப்படியில்லை. மனுதாரர்கள் கஷ்ட ஜீவனத்தில் உள்ளார்கள் என்றும் அதனால் அவர்களுக்கு நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்த முடியாமல் உள்ளார்கள் என்று சொன்னால் அதுசரியல்ல. மனுதாரர்களிடமிருந்து நான்சொத்தை ஏமாற்றி எழுதி வாங்கியுள்ளதால் மனுதாரர்கள் வசதியாக இருப்பதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே மனுவை அனுமதிக்கவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.